**செய்தி வெளியீடு எண்.181** **நாள் : 14.11.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு-பன்வாரிலால் புரோகித் அவர்கள் இன்று (14.11.2019) ராஜ்பவனில் பண்டித ஜவஹர்லால் நேரு சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார்.**

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 131வது பிறந்தநாளை முன்னிட்டு இன்று (14.11.2019) ராஜ்பவனில் அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில், ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஆர் ராஜகோபால், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் ராஜ்பவன் அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

மேலும், இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்டம் ஆற்காடு ஸ்ரீ மஹாலெட்சுமி மெட்ரிக் பள்ளி மாணவ, மாணவிகளும் கலந்து. கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதைத் தொடர்ந்து ராஜ்பவனில் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித், ஆற்காடு ஸ்ரீ மஹாலெட்சுமி மெட்ரிக் பள்ளி மாணவ, மாணவிகள் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்கள். மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு பேட்டரிகார் மூலம் ஆளுநர் மாளிகையை பார்வையிட தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

---

ராஜ்பவன் - 22 ஒம்/-

நாள் : 14.11.2019 இணை இயக்குநர் (ம.தொ)